அசல்

உ

திருச்சிற்றம்பலம்.

கீழக்கடம்பூர்.
15.7.1927.

கண்டவர்தமக்குக் கண்ணருள் வழங்கித்
தண்டமிழ்ப்பெருமைவிளக்கித் தமியனுக்
கெண்டொறுங்கன்மனமிளக்குமின்புறுத்தி
விண்டிடற்கரியசீர்மேவிவேலைசூழ்
மண்டலம்புகழ்மஹாமஹோபாத்தியாய

அய்யாஅவர்கள் திவ்ய பொற்பாதங்களின் திருச்சந்நிதானத்து அடியேன், S. தியாகராஜன் மிக்க வணக்கத்துடன் சமர்ப்பித்துக் கொள்ளும் விக்ஞாபனம். தாங்கள் உத்திரவளித்தவண்ணம், ட்ரெயினிங்காலேஜில்சேர, பிரைவேட் மானேஜர் கையெழுத்து வேண்டும் என்றார்கள் அது கிடைக்காததால் நான் அங்ஙனம் சேர முடியவில்லை. எதற்கும் என் விண்ணப்பமென் இடங்கொடுக்கவில்லையே, யான் என்ன செய்வேன், என்னே! என் வினையிருந்தவாறு? தங்கள் திருக்கண், கடைசாத்தினாலி யான் ஈடேறுவேன் என்பது திண்ணமே. இப்போது நான் செய்திருக்கும் பரீக்ஷையைக் கொண்டு எங்காவது வேலையில் இருக்கக் கூடுமானால் தாங்கள் அதற்குச் சிபார்சு செய்யவேண்டுமென்று தங்கள் மேலான திருவடிக்குப் பிரார்த்திக்கிறேன். ஏழையேனைக் காப்பாற்றுவது ஆமிங்காலத்துப் பயிர் தழைக்க மழைபெய்வதுபோலாகும். மற்றும் பிரிலிமினரி முதலிய பரீக்ஷைகளை தங்கள் ஆசிர்வாதபலங்கொண்டு, பிரைவேட்டில் படிக்கவேண்டுமென்று நினைத்திருக்கிறேன். அதற்கும் என் வறுமைக் கோளின்றுயர் சகிக்கக் கூடவில்லை. மற்றும் தங்கள் திருவடி மறவாத அன்பனும் தங்கள் பிரிவினைக்கிளைந்து நெக்குநெக்குருகி வாடுபவனும், ஆகிய ஏழையேன், S. Thiagarajan.

Headmaster.
Board School.
Kilakadambur

அசல்

திருப்பத்தூர்
திருச்சிராப்பள்ளி

நகல்

உ

திருச்சிற்றம்பலம்.

கீழக்கடம்பூர்
15-7-1927

கண்டவர் தமக்கு கண்ணருள் வழங்கித்
தண்டமிழ்ப் பெருமை விளக்கித் தமியருக்
கெண்டொறுங் கன்மன மிளக்கு மின்புறுத்தி
விண்படற் கரிய சீர்மேவி வேலைசூழ்
மண்டலம் புகழ் மஹா மஹோபாத்யாய

அய்யா அவர்கள் திவ்விய பொற்
பாதங்களின் திருச்சந்நிதானத்து அடியேன்
டீ. தியாகராஜன் மிக்க வணக்கத்துடன் சமர்ப்
பித்துக் கொள்ளும் விக்ஞாபனம், நிற்க. தாங்கள்
உத்தரவளித்த வண்ணம் ட்ரெயினிங் காலேஜில்
சேர பிரைவேட் மானேஜர் கையெழுத்துவேண்டும்
என்றார்கள் அது கிடைக்காததால் நான் அங்ஙனம்
சேர முடியவில்லை எதற்கும் என்வினைப்பயன்
இடங் கொடுக்கவில்லையே யான் என்ன செய்வேன்
என்னே என் வினையிருந்தவாறு தங்கள் திருக்கண்
கடைசாத்தினில் யான் ஈடேறுவேன் என்பது திண்ணமே
இப்போது நான் செய்திருக்கும் பரீக்ஷையைக் கொண்டு
எங்காவது வேலை ~~கிடைக்குமானால்~~ யில் இருக்கக்
கூடுமானால் தாங்கள் அதற்கு சிபார்சு செய்யவேண்
டும் என்று தங்கள் மேலான திருவடிக்குப் பிரார்த்
திக்கிறேன். ஏழையேனைக் காப்பாற்றுவது ஆயிரங்
காலத்துப் பயிர் தழைக்க மழை பெய்வது போலாகும்
மற்றும் பாலிமனரி முதலிய பரீக்ஷைகளை தங்கள்
ஆசிர்வாதபலங் கொண்டு பிரைவேட்டில் படிக்க
வேண்டுமென்று நினைத்திருக்கிறேன் எதற்கும்
என் வறுமைக் கோலமன்றியர் தகிக்கக்கூட வல்லை
மற்றும் தங்கள் திருவடி மறவாத அன்பரும் தங்
கள் பாலினை நினைந்து எனக்குனக்கு நெருக்கொடுபவரும்
ஆகிய (ஏழையேன்) T. Thiagarajan

நகல்

3

34

15 – 7. 1927.

கீழக்கடம்பூர்

S. தியாகராஜன்

S. Tiyagarajam.

Head. master.

Board School.

Kalakkadambur

G. 358 – 359

இப்ரதி கடிதம் திரிலே
பாரதி கவிதையில்
சேர்க்கப்பட்டுள்ளது.